ஆகஸ்ட் 5-11

**மனன வசனம்**

**இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாச முள்ளவர்களுக்கு அளிக்கும்படி வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின்கீழ் அடைத்துப் போட்டது. கலா 3:22.**

**ஆராய்ச்சிக்கு**

**கலா 3:21-25; லேவி 18:5; ரோமர் 3:9-19; 1 கொரி 9:20; ரோமர் 3:1,2; ரோமர் 8:1-4.**

ஆகஸ்ட் 5 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

**பாடம் 7**

# விசுவாசத்திற்குச் செல்லும் பாதை



வீட்டில் வளர்க்கப்படும் புறாக்கள் நூற்றுக்கணக் கான மைல் சுற்றித் திரிந்தாலும், தாங்கள் புறப்பட்ட இடத்திற்குச் சரியாக வந்து சேரும் இயல்புடையவை. ஆனாலும், சிறந்தபுறாக்கள்கூட சிலசமயங்களில் கூட் டத்திலிருந்து விலகிச்சென்று, தாங்கள் புறப்பட்ட இடத் திற்கு வந்து சேராமல் இருந்திருக்கின்றன. அப்படி மோசமான சம்பவம் இங்கிலாந்தில் ஒருமுறை நிகழ்ந்தது. 6 லட்சம் டாலருக்கும் அதிகமான மதிப்புள்ள 20,000 புறாக்கள் தங்கள் கூடுகளுக்குத் திரும்பவில்லை. இன்று வரைக்கும் அதற்கான காரணம் புரியவில்லை.

பிரிந்துசெல்வதும் தொலைந்துபோவதும் மோச மான ஒரு விஷயமென்பதை நாம் ஒவ்வொருவருமே அனுபவித்திருப்போம். அது பயத்தையும் கவலையை யும் திகிலான சூழலையும் ஏற்படுத்தக்கூடியது.

ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் இது பொருந்தும். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பிறகும்கூட, நாம் அவரி டம் திரும்பிச் செல்ல முடியாதபடி பிரிந்துசெல்ல, அல் லது, தொலைந்துபோக வாய்ப்பிருக்கிறது.

ஆனால், 'நாம் சுயமாகப் பாடுபட தேவன் விட வில்லை' என்பதுதான் நற்செய்தி. விசுவாசத்திற்கான பாதையை நற்செய்தியில் சொல்லியிருக்கிறார்; நியாயப் பிரமாணமும் அதில் அடங்கும். அநேகர் நற்செய்தியி லிருந்து நியாயப்பிரமாணத்தைப் பிரித்துப்பார்க்க முயல்கிறார்கள்; அவை ஒன்றுக்கொன்று முரண்படு வதாக சிலர் நினைக்கிறார்கள். இந்தக் கருத்து தவறா னது; மோசமானது. நியாயப்பிரமாணம் இல்லாமல் நற் செய்தி இல்லை. நியாயப்பிரமாணத்தை விட்டு விட்டு நற்செய்தியைப் பிரசங்கிப்பதும் கடினம்.

2017, ஆகஸ்ட் 12 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## நியாயப்பிரமாணமும் வாக்குத்தத்தமும்

*'நியாயப்பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமா?' கலா 3:21.*

'தான் நியாயப்பிரமாணத்தை வெறுப்பதாக, தான் சொல்வதை வைத்து தன் எதிரிகள் நினைக்கக்கூடும்' என்றும், 'மோசேயையும் நியாயப் பிரமாணத்தையும் குறைத்துக்காட்டவே தேவனுடைய வாக்குத்தத்தங்களை தான் முக்கியப்படுத்து வதாக அவர்கள் நினைக்கக்கூடும்' என்றும் பவுல் உணர்ந்தார். எனவேதான், ''நியாயப்பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமாக இருக் கிறதா?'' என்று கேள்வி எழுப்புகிறார். உடனே, ''அப்படி இல்லை'' என்றும் ஆணித்தரமாகக் கூறுகிறார். அப்படி இருக்க வாய்ப்பில்லை; ஏனென்றால், தேவன் தமக்கே விரோதமாகச் செயல்படுவாரா? நியாயப்பிரமாணம் வாக்குத்தத் தத்திற்கு விரோதமானது அல்ல. தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் இரண் டும் வெவ்வேறு பணிகளைச் செய்கின்றன.

**நியாயப்பிரமாணத்தின் பங்குபற்றி பவுலின் எதிரிகள் வைத்திருந்த தவறான கருத்துகள் யாவை? கலா 3:21; லேவி 18:5 ஐ உபா 6:24 உடன் ஒப்பிடுங்கள்.**

நியாயப்பிரமாணம் தங்களை ஆவிக்குரிய பாதையில் கொண்டுசெல்லு மென மக்கள் நம்பினார்கள். உபா 6:24; லேவி 18:5 போன்ற பழைய ஏற்பாட்டு வாக்கியங் களை அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டதுதான் அதற்குக் காரணமாக இருக்கலாம். ஏனெனில், தேவனுடைய உடன்படிக்கைக்குள் வாழ்வதற்கு நியா யப்பிரமாணம் உதவுவது உண்மைதான். ஆனால், 'தேவனோடு மனிதன் உறவு வைத்திருக்க நியாயப்பிரமாணமே மூலாதாரம்' என்று தவறாக முடிவுசெய்துவிட் டார்கள். 'உயிர்ப்பிக்கும்' அனுபவம் தேவ வல்லமையினாலும் அவருடைய ஆவியினாலும் மாத்திரமே ஆகக்கூடியதென வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது. 2 இராஜா 5:7; நெகே 9:6; யோவா 5:21; ரோமர் 4:17. எந்த மனிதனுடைய ஆவிக் குரிய வாழ்வையும் நியாயப்பிரமாணம் உயிர்ப்பிக்கமுடியாது. அதற்காக, நியா யப்பிரமா ணம் தேவ வாக்குத்தத்தத்திற்கு விரோதமானதென்று அர்த்தம் இல்லை.

நம்மை நியாயப்பிரமாணத்தால் உயிர்ப்பிக்க முடியாதென்பதை நிரூபிக்க, 'வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின்கீழ் அடைத்துப்போட்டது' என்கிறார் பவுல். கலா 3:22. நாம் எவ்வளவு மோசமானவர்களென்பதைக் காண்பிக்க, பழைய ஏற்பாட்டு வசனங்களை ரோமர் 3:9-19 இல் மேற்கோள்காட்டுகிறார். பாவப்பிரச்சனையின் மையக்காரணத்திலிருந்து ஆரம்பிக்கிறார். அதாவது, மனி தரின் இருதயங்களைப் பீடித்திருக்கும் சுயநலப்பாங்கைச் சுட்டிக்காட்டுகிறார்; பிறகு, பாவம் எங்கும் பரவி, எல்லாரையும் பீடிப்பதாகக் கூறுகிறார்.

'பாவம் பெரியது; நியாயப்பிரமாணத்திற்கு ஓர் எல்லை உண்டு; எனவே, நமக்காக கிறிஸ்து உண்மையாக இருந்ததால்தான் நித்திய வாழ்வின் வாக்குத்தத் தத்தை நாம் பெறமுடிகிறது' என்பதுதான் பவுலின் கருத்து.

நியாயப்பிரமாணம் நம்மை இரட்சிக்க முடியாததுதான். ஆனால், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதால் என்ன பெரும் நன்மைகளைப் பெறலாம்? அதாவது, தேவ கட்டளைக் குக் கீழ்ப்படிந்ததால், நீங்கள் உங்கள் வாழ்வில் பெற்ற நன்மை என்ன?

## நியாயப்பிரமாணத்தின்கீழ் காவல்

'விசுவாசம் வருகிறதற்கு முன்னே நியாயப்பிரமாணத்தின்கீழ் காவல் பண்ணப்பட்டிருந்தோம்' என்று சொல்கிறார் பவுல். கலா 3:23. தன்னையும் கலாத்தியாவிலிருந்த யூதவிசுவாசிகளையும் சேர்த்து, 'நாம்' என்கிறார். 'நீங்கள்' என்று கலா 3:26 இல் மற்றவர்களைப்பற்றிப் பேசுகிறார்.

கலா 3:23 இல் 'விசுவாசம் வருகிறதற்குமுன்னே' என்றிருப்பதை 'அந்த விசுவாசம் வருகிறதற்கு முன்னே' என்றுதான் மொழிபெயர்த்திருக்க வேண்டும். 'கிறிஸ்து வருவதற்குமுன் நியாயப்பிரமாணத்தின் நிலை எப்படி இருந்தது? கிறிஸ்து வந்தபின் என்னவாயிற்று?' என்று வேறுபடுத்திக்காட்ட பவுல் முயல்கிறார். கலா 3:24. எனவே, 'விசுவாசம்' என்று கிறிஸ்தவ விசுவாசத்தை அல்ல; கிறிஸ்துவைத்தான் அவர் குறிப்பிட்டிருக்கவேண்டும்.

***கிறிஸ்து வருகிறதற்கு முன்னர், நியாயப்பிரமாணத்தின்கீழ் யூதர்கள் காவல்பண்ணப்பட்டிருந்ததாக பவுல் கூறுகிறார். 'நியாயப்பிரமாணத்தின்கீழ்' என்று அவர் எதைக் குறிப்பிடுகிறார்? ரோமர் 6:14,15; 1கொரி 9:20; கலா 4:4,5,21; 5:18 ஐ கலா 3:22,23 உடன் ஒப்பிடுங்கள்.***

'நியாயப்பிரமாணத்தின்கீழ்' எனும் சொற்றொடரை பவுல் தன் நிருபங்களில் 12 முறை பயன்படுத்தியுள்ளார். அவற்றை அவர் உபயோகிக்கும் விதத்தைவைத்து அவற்றிற்கு இரண்டு அர்த்தங்கள் கூறலாம்.

**1 நியாயப்பிரமாணத்தின்கீழ் என்பது இரட்சிப்பிற்கான மாற்றுவழி (கலா 4:21)**

கீழ்ப்படிதலினால் ஜீவனுக்கேதுவான நீதியைச் சம்பாதிக்க, கலாத்தியாவில் இருந்த பவுலின் எதிரிகள் முயன்றார்கள். அது முடியாத ஒரு காரியம். கலா 3:21, 22. நியாயப்பிரமாணத்தின்கீழ் இருக்க விரும்புகிறவர்கள் கிறிஸ்துவை மறுதலிக்கிறவர்கள். கலா 5:2-4.

**2 நியாயப்பிரமாணத்தின்கீழ் என்பது அதன் ஆக்கினைக்கு உட்படுதல் (ரோமர் 6:14,15)**

பாவத்திற்கு நிவாரணம்செய்ய நியாயப்பிரமாணத்தால்முடியாது; எனவே, நியாயப்பிரமாணத்தை மீறுவது ஆக்கினைக்கு ஏதுவானது. இப்படிப்பட்ட ஒரு நிலையில்தான் மனிதர்கள் அனைவருமே இருக்கிறார்கள். நியாயப்பிரமாணம் ஒரு சிறைக்காவலனைப் போன்றது; கட்டளையை மீறுகிற யாவரையும் அது சிறையில் அடைத்து, அவர்களுக்கு மரணதண்டனைவிதிக்கிறது. கலா 3:23 இல் உள்ள 'அடைக்கப்பட்ட' எனும் வார்த்தைக்கு அதுதான் அர்த்தம்; 'நியாயப்பிரமாணத்தின்கீழ்' என்று இதைத்தான் பவுல் சுட்டிக்காட்டுகிறார்.

'நியாயப்பிரமாணத்தின்கீழ்' என்பதற்கான கிரேக்க வார்த்தை '**எனோமோஸ்**'. அதற்கு 'நியாயப்பிரமாணத்திற்குள்' என்று அர்த்தம். அதாவது, கிறிஸ்துவோடு இணைந்து, நியாயப்பிரமாணத்தின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதாகும். 1கொரி 9:21. 'நியாயப்பிரமாணத்தின் கிரியைகளால்', அதாவது, கிறிஸ்துவை விட்டுவிட்டு நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முயல்வதால், எவரும் நீதிமானாக்கப்பட முடியாது. ஏனென்றால், விசுவாசத்தின்மூலம் நீதியைப் பெறுகிறவர்களே வாழ்வார்கள். கலா 3:11. நியாயப்பிரமாணத்தை இந்த உண்மை அவமாக்கவில்லை; நியாயப்பிரமாணம் நமக்கு நித்திய ஜீவன் தரமுடியாதென்பதைக் காட்டுகிறது.

## காவல்பண்ணும் நியாயப்பிரமாணம்

நியாயப்பிரமாணம்பற்றி 2 அடிப்படை உண்மைகளைக் கூறுகிறார் பவுல்.

1 **ஆபிரகாமோடு தேவன் செய்த உடன்படிக்கையை நியாயப்பிரமாணம் அவமாக்கவோ ஒழிக்கவோ இல்லை. கலா 3:15-20.**

2 **நியாயப்பிரமாணம் வாக்குத்தத்தத்திற்கு விரோதமானது அல்ல. கலா 3:21,22.**

நியாயப்பிரமாணத்தின் உண்மையான வேலை என்ன? அது 'அக்கிரமத்தின் நிமித்தம்' கூட்டப்பட்டது. கலா 3:19. காவல்பண்ணுதல் (வச 23), அடைத்துப்போடுதல் (வச 23), 'உபாத்தி' (வச 24) எனும் மூன்று வெவ்வேறு வார்த்தைகள்மூலம் இந்தக் கருத்தை விரிவாகக் கூறுகிறார்.

***கலா 3:19-24 ஐ ஜெபத்தோடு வாசியுங்கள். நியாயப்பிரமாணம்பற்றி பவுல் சொல்வது என்ன?***

கலா 3:19 இல், நியாயப்பிரமாணத்தைத் தாழ்த்திப்பேசுவதுபோல் இன்றைய மொழிபெயர்ப்புகள் அமைந்துள்ளன. ஆனால், மூலமொழியில் அப்படியில்லை. 'காவல்பண்ணப்பட்டிருந்தோம்' எனும் வார்த்தை, 'அடிமைப்படுத்தப்பட்டோம்', 'காவல்வைக்கப்பட்டோம்' என்று விரும்பத்தகாத ஒன்றைச் சுட்டிக்காட்டலாம். 2 கொரி 11:32. ஆனால், 'பாதுகாத்தல்' என்று நல்ல விதத்தில்தான் புதியஏற்பாட்டில் பொதுவாக அவ்வார்த்தை பயன்பட்டுள்ளது. பிலி 4:7; 1 பேதுரு 1:5. 'அடைத்து வைத்தல்' எனும் வார்த்தையும் அதுபோல்தான் வருகிறது. கலா 3:23. 'பாதுகாப்புக்காக அடைத்தல்' என்றும் அந்த வார்த்தையை மொழிபெயர்த்திருக்கலாம். ஆதி 20:17; யாத் 14:3; யோசு 6:1; எரே 13:19; ரோமர் 11:32.

***ஒழுக்கப்பிரமாணங்கள், சடங்காச்சாரப் பிரமாணங்களால் இஸ்ரவேல் புத்திரருக்கு உண்டான நன்மைகள் யாவை? ரோமர் 3:1,2; உபா 7:12-24; லேவி 18:20-30.***

நியாயப்பிரமாணம் விரும்பத்தகாத ஒன்று என்று சொல்வது போலத்தெரிந்தாலும் (ரோமர் 7:6; கலா 2:19), அதுபற்றி நன்மையான பலவிஷயங்களையும் அவர் கூறுகிறார். ரோமர் 7:12,14; 8:3,4; 13:8. நியாயப்பிரமாணத்தை ஒரு சாபமாக அல்ல, ஆசீர்வாதமாக இஸ்ரவேலருக்கு தேவன் கொடுத்தார். அதன் சடங்காச்சார முறைமைகள், அவர்களுடைய பாவத்தை நிவிர்த்திசெய்ய முடியாவிட்டாலும், பாவத்தை நிவிர்த்திசெய்ய வல்லவரான மேசியாவை அது சுட்டிக்காட்டியது. நடத்தையைக் கட்டுப்படுத்தும் அதன் கட்டளைகள், மனிதரைப் பீடித்திருந்த மோசமான காரியங்களிலிருந்து, இஸ்ரவேலரைப் பாதுகாத்தது. வேதாகமத்தின் மற்ற இடங்களில் நியாயப்பிரமாணம்பற்றி நல்லவிதத்தில் பவுல் பேசும்போது, இங்குமட்டும் அதனை விரும்பத்தகாத ஒன்றாக பவுல் சித்தரிப்பாரா?

நன்மையான ஒன்று தீமைசெய்யப் பயன்படுத்தப்படுவதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? உதாரணமாக, வியாதியைக் குணப்படுத்துவதற்கென்று உருவாக்கப்படும் சில மருந்துகளை போதைவஸ்துக்களாக சிலர் உபயோகிப்பதில்லையா? இந்த நியதியை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எவ்வாறு அனுபவித்திருக்கிறீர்கள்? நன்மையானவை தீமையானவையாகவும் பயன்பட வாய்ப்புள்ளது எனும் அறிவு, இங்கு பவுல் சொல் வதைப் புரிந்துகொள்ள எவ்வாறு உதவுகிறது?

**கலா 3:23இல், 'நியாயப்பிரமாணம் நம்மை அடைத்து, பாதுகாக்கும் வல்லமை' என்கிறார் பவுல். வச 24இல் நியாயப்பிரமாணத்தை அவர் எதனோடு ஒப்பிடுகிறார்? அதன் அர்த்தம் என்ன?**

'உபாத்தி' என்பதற்கான கிரேக்க வார்த்தை '**பைடகாகோஸ்**'. 'கண்டிப்பவர்', 'ஆசிரியர்', 'பாதுகாப்பாளர்' என்றும் சில மொழிபெயர்ப்புகளில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், இந்த வார்த்தைகள் எதுவும் அதன் சரியான அர்த்தத்தைத் தெரிவிக்கப் போதுமானவையாக இல்லை. பணக்கார ரோமர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஆறு அல்லது ஏழு வயதாகும்போது, அவர்களைக் கவனிப்பதற்கு அடிமை ஒருவனை வேலைக்கு வைப்பார்கள். அந்தப் பிள்ளை வளர்ந்து பெரியவனாகும் மட்டும், அவனைக் குளிக்கவைத்து, சாப்பிடவைத்து, உடைஉடுத்திவிட்டு, ஆபத்திலிருந்து பாதுகாப்பது அந்த அடிமையின் வேலை. 'பிள்ளை பள்ளிக்குச் செல்கிறானா? வீட்டுப்பாடம் செய்கிறானா?' என்பதைக் கவனிப்பதும் அந்த அடிமையின் பொறுப்புதான். மேலும், பிள்ளைக்கு அவன் நல்லொழுக்கங்களைக் கற்றுக்கொடுக்கவேண்டும்; நல்லொழுக்கத்தோடு நடக்கிறானாவென்றும் பார்க்கவேண்டும். இந்த அடிமையைத்தான் '**பைடகாகோஸ்**' என்பார்கள்.

சில உபாத்திகள் அன்புள்ளவர்களாக, குழந்தைகளுக்குப் பிடித்தமானவர்களாக இருப்பார்கள். ஆனால், பொதுவாக அவர்கள் மிகவும் கண்டிப்புடன் இருந்ததாகத்தான் முற்கால இலக்கியம் கூறுகிறது. பிள்ளைகளை மிரட்டுவார்கள்; கண்டிப்பார்கள்; பிரம்பால் அடித்தும் கீழ்ப்படிய வைப்பார்கள்.

'நியாயப்பிரமாணம் ஒரு பைடகாகோஸ்' என்கிறார் பவுல். நியாயப்பிரமாணத்தின் வேலைபற்றி அவர் என்ன நினைத்தாரென்பது புரிகிறது. பாவத்தைச் சுட்டிக்காட்டி, அறிவுறுத்தவே நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. ஆனாலும், நியாயப்பிரமாணத்திற்கு மோசமான ஒரு தன்மையும் உண்டு. அதாவது, அது நம்மைப் பாவிகளென்று குற்றப்படுத்துகிறது. இந்த 'மோசமான' தன்மையையும் தேவன் நம் நலனுக்காகப் பயன்படுத்துகிறார். ஏனெனில், நியாயப்பிரமாணம் நம்மைக் குற்றப்படுத்துவதால்தான் நாம் கிறிஸ்துவுக்கு நேராக இழுக்கப்படுகிறோம். ஆகையால், நியாயப்பிரமாணமும் நற்செய்தியும் ஒன்றுக்கொன்று விரோதமானவைகளல்ல. அவை இரண்டும் சேர்ந்து, நம் இரட்சிப்புக்கேதுவாகப் பிரயாசப்பட வேண்டுமென்பதுதான் தேவசித்தம்.

கலா 3:24 இல், ஒழுக்கப்பிரமாணம்பற்றி பரிசுத்த ஆவியானவர் பேசுகிறார். நியாயப்பிரமாணம் பாவத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது; கிறிஸ்து நமக்குத் தேவையென்பதை உணரச்செய்கிறது; தேவனிடத்தில் மனந்திரும்பி, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் விசுவாசம்வைத்து, பாவமன்னிப்பும் சமாதானமும் வேண்டி, அவரிடம் ஓடவைக்கிறது.

உங்கள் செய்கைகளையும் வார்த்தைகளையும் எண்ணங்களையும் நியாயப்பிரமாணத்தோடு நீங்கள் ஒப்பிட்டுப்பார்த்ததுண்டா? எழுத்தின்படி மட்டுமல்ல, மனச்சாட்சியின்படியும் அவற்றை நியாயப்பிரமாணத்தோடு ஒப்பிடுங்கள். மத் 5:28; ரோமர் 7:6. இந்த நிருபத்தில் பவுல் வலியுறுத்தும் கருத்துக்கு ஒத்ததாக உங்கள் பதில் உள்ளதா?

## நியாயப்பிரமாணமும் விசுவாசியும் (கலா 3:25)

கலா 3:25 ஐ தவறாகப் புரிந்துகொள்கிறவர்கள் நியாயப்பிரமாணத்தை முற்றிலும் புறக்கணிக்கிறார்கள். ஆனால், நியாயப்பிரமாணத்தை முக்கியப்படுத்தியே பவுல் பேசிவருகிறார்.

***அப்படியானால், கலா 3:25 இல் பவுல் சொல்வது என்ன?***

---

முதலாவதாக, நியாயப்பிரமாணத்தின் ஆக்கினைக்கு இனி கீழ்ப்படாதவர்களாகிறோம். ரோமர் 8:3. விசுவாசிகளாகிய நாம் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிறோம்; கிருபையின்கீழ் இருப்பதின் சிலாக்கியத்தை அனுபவிக்கிறோம். ரோமர் 6:14,15. கிறிஸ்துவை முழுமனதோடு சேவிக்கும் சுதந்தரத்தை அது தருகிறது; இடையில் நாம் தவறுசெய்ய நேரிடினும், ஆக்கினைகுறித்த பயத்தை அகற்றுகிறது. நற்செய்தியில் உள்ள மெய்யான சுதந்தரமும் விடுதலையும் இதுதான். அதற்காக, நியாயப்பிரமாணத்திற்கு நாம் முற்றிலும் கீழ்ப்படியவேண்டிய அவசியமில்லையென்று அர்த்தமல்ல. ஆனால், இதுதான் கிறிஸ்துவுக்குள்ளான 'சுதந்தரம்' என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால், நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாதது பாவம். பாவம் எப்படிச் சுதந்தரமாக முடியும்? யோவான் 8:34.

***இனி நாம் ஆக்கினைக்குள் தீர்க்கப்படுவதில்லை என்பதின் அர்த்தம் என்ன? ரோமர் 8:1-3. இந்த அற்புத உண்மை நாம் வாழும்விதத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தவேண்டும்?***

---

கிறிஸ்துவிடம் மன்னிப்புப்பெறுகிறவர்கள், நியாயப்பிரமாணத்தோடு புதியதொரு உறவில் நுழைகிறார்கள்; தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை வாழ்வதற்கு அழைக்கப்படுகிறார்கள். 1தெச 4:1. அதைத்தான், 'ஆவியில் நடத்தல்' என்கிறார் பவுல். கலா 5:18. அதனால் இனி ஒழுக்கப்பிரமாணம் அவசியமில்லை என்று அர்த்தமல்ல. பாவம் இன்னதென்று அடையாளங்காட்டுவது நியாயப்பிரமாணம்தானே.

தேவனுடைய குணத்தின் பிரதிபலிப்பாக நியாயப்பிரமாணம் இருப்பதால், நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதன்மூலம் அவர் குணத்தைப் பிரதிபலிக்கிறோம். அதைவிட மேலாக, குறிப்பிட்ட சில விதிமுறைகளை அல்ல; இயேசுவையே பின்பற்றுகிறோம்; நியாயப்பிரமாணம் செய்யமுடியாததை இயேசு நமக்குச் செய்கிறார்; அதாவது, நியாயப்பிரமாணத்தை நம் இருதயங்களில் எழுதுகிறார். எபி 8:10. நியாயப்பிரமாணத்தின் நீதியான நிபந்தனை நம்மில் நிறைவேறச்செய்கிறார். ரோமர் 8:4. அதாவது, இயேசுவோடு உறவுவைப்பதால், நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய வல்லமைபெறுகிறோம்.

---

ரோமர் 8:4 இல் பவுல் சொல்வது என்ன? இந்த வாக்குத்தத்தம் உங்களுடைய சொந்த வாழ்வில் எவ்வாறு வெளிப்பட்டுள்ளது? அதேநேரம், உங்களில் எவ்வளவு நன்மையான மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், ஏன் கிறிஸ்து நமக்காகச் செய்ததை அடிப்படையாகக் கொண்டுதான் நம்முடைய இரட்சிப்பு அமைந்திருக்கிறது?

'நம்மைக் கிறிஸ்துவிடம் கொண்டுவரும் உபாத்தியாக இருக்கும் பிரமாணம் எது?' என்று கலாத்தியரில் சொல்லப்படும் நியாயப்பிரமாணம் குறித்து என்னிடம் கேட்கிறார்கள். 'சடங்காச் சாரப் பிரமாணமும் பத்துக்கற்பனைகளான ஒழுக்கவிதியுமே' என்று பதிலளித்தேன்.

யூதரின் ஒழுங்குகள் அனைத்துக்கும் கிறிஸ்துவே அடித்தளமாக இருந்தார். இயேசுவின் இரத்தமே நம்மை இரட்சிக்கமுடியும். அந்தத் தேவதிட்டத்திற்குக் கீழ்ப்படிய காயீன் மறுத்தான்; ஆபேலைக் கொன்றான். பலி இரத்தமானது உலகத்திற்காகச் சிந்தப்படும் கிறிஸ்துவின் இரத் தத்தைச் சுட்டிக்காட்டியதென்பதை காயீன் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்தச் சடங்காச்சாரம் அனைத்தையும் ஏற்படுத்தியவர் தேவன். அவை கிறிஸ்துவை அடிப்படையாகக் கொண்டிருந்தன. யூதரின் முறைமைகள் அனைத்திற்கும் அஸ்திபாரமான கிறிஸ்துவை ஒரு பாவி நோக்கிப்பார்க் கும்படிச் செய்கிற உபாத்தியாக நியாயப்பிரமாணம் அப்போதுதான் செயல்படத்துவங்கியது.

ஆசரிப்புக்கூடாரச் சடங்காச்சாரப் பணியில் ஈடுபட்டிருந்த யாவரும், மனித இனத்திற்காக கிறிஸ்து பரிந்துபேசுவது குறித்து நித்தமும் கற்றுவந்தார்கள். தேவ ராஜ்யத்தின் கட்டளையான தேவ பிரமாணத்தின்மேல் ஒவ்வொருவரும் அன்பு வைக்கும்படி அந்தச் சடங்காச்சாரம் ஏற் படுத்தப்பட்டது.' – *1 SM, p.233.*

பத்துக்கற்பனைகளைக் கட்டுப்பாடுகளென்று பார்க்காமல், நம்மேல் காட்டப்படுகிற இரக்கமென்று பார்க்கவேண்டும். அதன் கட்டுப்பாடுகளுக்குக் கீழ்ப்படியும் போது நமக்குச் சந் தோஷம் நிச்சயம். கிறிஸ்துவுக்குள் அவற்றுக்குக் கீழ்ப்படியும் போது, பரிபூரண குணம் நம்மில் உருவாகும்; நித்தியகால மகிழ்ச்சியைத் தரும். கீழ்ப்படிகிறவர்களுக்கு அது பாதுகாப்பின் அர ணாக இருக்கிறது. – *1 SM, p.235.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *பாவத்தை நாம் மேற்கொள்ளமுடியுமா? பாவத்தின்மேல் வெற்றியை வாக்களிக்கும் வாக்குத்தத்தங்கள் யாவை? அவை நம்மில் நிறைவேற நம் வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்? அதேநேரம், நம் இரட்சிப்பிற்கு நம் வெற்றிகளைச் சார்ந்திராமல், நமக்காக கிறிஸ்துபெற்ற வெற்றியைச் சார்ந்திருக்க நாம் எவ்வளவு எச்சரிப்புடன் இருக்கவேண்டும்?*

2. *நியாயப்பிரமாணம் ஒழிந்துவிட்டதாகப் பல கிறிஸ்தவர்கள் கூறுகிறார்கள். ஆனால், அதே கிறிஸ்தவர்கள்தாம் பாவத்திற்கு எதிராகவும் பேசுகிறார்கள். அப்படியானால், நியாயப்பிரமாணம் ஒழிந்ததாக எப்படிச் சொல்லமுடியும்? என்ன அர்த்தத்தில் அவர்கள் அப்படிச் சொல்கிறார்கள்? அதற்கு அவர்கள் எந்தக் கற்பனையைக் காரணம் காட்டக்கூடும்?.*

**பாடச்சுருக்கம்:** பாவிகளுக்கு கிறிஸ்து தேவை. இதை அவர்களுக்குச் சுட்டிக்காட்டவே நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. அது நம்மைக் கண்டித்து, நம் பாவத் தன்மை யைச் சுட்டிக்காட்டி, 'நீகுற்றவாளி' என்கிறது. இந்த ஆக்கினையிலிருந்து நியாயப்பிரமா ணத்தின் கிறிஸ்து நம்மை விடுவித்து, தம் நியாயப்பிரமாணத்தை நம் இருதயங்களில் எழுதுகிறார்.

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,
டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.